

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, 24 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரணி இல்லத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள தமிழகம் விருந்தினர் இல்லத்தில், நீலகிரி முன்னாள் மாவட்டச் செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான முபாரக், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது பேத்தி அர்ஷியா தன்சீம் – முகமது ரிஸ்வான் ஆகிய புதுமணத் தம்பதியருடன் சந்தித்து, வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, கழகத் துணை பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, மாவட்டக் கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம்! அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் – சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ – தி.பழநிவேலு பங்கேற்பு!

தஞ்சாவூர், மே.17.

தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் மண்டலச் செயலாளரும், முதன்மைச் செயலாளருமான அமைச்சர் கே.என்.நேரு கழக நிர்வாகிகளிடம் நேரில் குறைகளை கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கினார்.

கழகத்தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் மண்டலச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலையில் தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகளை தனித்தனியாக அழைத்து அவர்களின் ஆலோசனையையும், குறைகளையும் கேட்டறிந்து குறிப்பெடுத்துக் கொண்டார்.

தஞ்சை மத்திய மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் தஞ்சை கலைஞர் அறிவாலயத்திலும், தஞ்சை தெற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் பட்டுக்கோட்டை வசந்தம் மஹாலிலும், தஞ்சை வடக்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம் கும்பகோணம் ராயா அனுகிரஹா மஹாலிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் நிர்வாகிகளிடம் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தேர்தல் வியூகம் அமைத்து செயல்படுவது கழக அரசின் சாதனைகளை ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டு செல்வது தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க நம் தலைவர் அவர்கள் மேற்கொண்டு வரும் சட்டப் போராட்டங்களை பொதுமக்களிடத்தில் விளக்கிக் கூறுவது, மேலும் நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர வைத்து, திமுக ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க அயராது பாடுபடுவோம் என ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு. கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தி.பழநிவேலு. கழக உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மு.சண்முகம் எம்.பி, முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், தொகுதி பார்வையாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் பங்கேற்றனர்.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு

# புதிதாக தேர்வு செய்யப்பட்ட 15 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, மே 17-

நேற்று முன்தினம் (14.5.2025) முதற்கட்டமாக சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 15 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு (Junior Assistant cum Typist) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

2025ஆம் ஆண்டிற்கான பல்வேறு பதவிகளில் உள்ள 144 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு. பிரபாகர், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், ந.ரவிக் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பாலிடெக்னிக் நேரடி 2–ஆம் ஆண்டு சேர்க்கை:

# அனைத்துப் பாடப்பிரிவினரும் சேரலாம்!

சென்னை,மே.17-

இனிமேல் பிளஸ் 2-வில் எந்த பாடப் பிரிவை எடுத்து படித்திருந்தாலும் பாலிடெக்னிக் படிப்பில் நேரடி 2-ஆம் ஆண்டு சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம் என்று தொழில்நுட்பக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடியாக 2-ஆம் ஆண்டு சேருவதற்கான ('லேட்ரல் என்ட்ரி' முறை) முறை உள்ளது. கணிதம், இயற்பியல் வேதியியல் உள்ளிட்ட பாடங்களுடன் பிளஸ் 2 முடித்த மாணவர்கள், 10-ஆம் வகுப்பு முடித்துவிட்டு அதன்பின் 2 ஆண்டு ஐடிஐ படித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

முன்னதாக பிளஸ் 2-வில் கணித பாடத்தை பிரதானமாக எடுத்துப் படித்தவர்கள் மட்டுமே பாலிடெக்னிக் படிப்பில் நேரடி 2-ஆம் ஆண்டு வகுப்பில் சேரலாம் என்று விதி இருந்தது.

இந்த நிலையில், வணிகவியல் உள்பட அனைத்து பாடப்பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், வரும் கல்வியாண்டு முதல் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தொழில்நுட்பக் கல்வித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தொழில் நுட்பக் கல்வி இயக்கக ஆணையரின் அறிவுறுத்தலின்படி, பிளஸ் 2 தேர்வில் வணிகவியல் உள்பட அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் 2025-26-ஆம் கல்வியாண்டில், நேரடி இரண்டாம் ஆண்டு பட்டய படிப்பில் சேர்க்கை செய்து கொள்ள அனைத்து பலவகை தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர்களுக்கும் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

